அறிவார்ந்த இயக்கமான தி.மு.க. மீது பழிபோடுவதுதான் விஜய் அரசின் நோக்கம்!

பெரியார் அறிவுலகத்திற்கு புத்தகம் வாங்கியது பற்றி துறை ரீதியான விசாரணைக்கு உத்தரவிடாதது ஏன்?

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமன் கேள்வி!

சென்னை, நவ.10–

அறிவார்ந்த இயக்கமான தி.மு.க. மீது பழிபோடுவதுதான் விஜய் அரசின் நோக்கம் என்றும் மக்கள் பிரச்சினைகளுக்கு வாய் திறக்காமல் Fake Narrative செட் செய்து கொண்டுள்ளார் முதல்வர் விஜய் என்றும் எந்த ஒரு பைத்தியக்காரனும் ‘திரிஷா விஜய்’ன்னு ஒரு புக்க வாங்க மாட்டான்; அதுவும் தி.மு.க. வாங்காது என்றும் STAND UP COMEDIAN ராஜ்மோகன் துறை ரீதியான விசாரணைக்கு உத்தரவிடாதது ஏன்.? என்றும் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் பரந்தாமன் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவரது பேட்டி வருமாறு:-

Fake reels மூலமா ஆட்சிக்கு வந்த த.வெ.க. கட்சி தி.மு.க. மேல ஒரு Fake Narrative செட் பண்ணி, வெட்கமே இல்லாம தமிழ்நாட்டுல அரசியல் செஞ்சுட்டு இருக்காங்க. ஆறு மாசம் ஆட்சிக்கு வந்து, செஞ்சது என்னன்னு சொல்றதுக்கு வக்கு இல்லை; ஆனா, தி.மு.க., தி.மு.கன்னு சொல்லி தி.மு.க. மேல பழி போடுறதை கொஞ்சமும் கூச்சமே இல்லாம, வெட்கமே இல்லாம, ஒவ்வொரு நாளைக்கும் ஒரு கொத்து கதைகளைக், கற்பனை கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அரங்கேற்றி ஒரு அநாகரிகத்தினுடைய உச்சமா தமிழ்நாட்டினுடைய அரசியல் போயிட்டு இருக்கு.

பெரியார் அறிவு உலகம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில கட்டப்பட்டதுன்னு நாட்டு மக்களுக்கு நல்லா தெரியும். அதை சமீபத்துல தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் போய் திறந்து வச்சாங்க. திறந்து வச்சது பெரிய செய்தி ஆகல, மக்கள் மத்தியில பேசப்படல. ஆனால், அது வருவதற்கு காரணமாக இருந்த திராவிட மாடல் நாயகர், தி.மு.க. வினுடைய தலைவர் தளபதி அவர்கள் போய் பார்த்துட்டு வந்த பிறகு, அதுக்கு கிடைச்ச அந்த வரவேற்பு, அந்த செய்திக்கு கிடைத்த முக்கியத்துவம் அதை கொஞ்சம் கூட பொறுத்துக்க முடியாம ஒரு ஃபேக் நரேட்டிவை இன்னைக்கு செட் பண்ணி இருக்காரு த.வெ.க. அரசு.

நான் தமிழ்நாட்டினுடைய பள்ளிக்கல்வித்துறை அமைச்சருக்கும் சரி, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களுக்கும் சரி, நான் கேட்கக்கூடிய, திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கக்கூடிய கேள்வி இதுதான்: புத்தகங்கள் தரமான புத்தகம் இல்ல, தவறான புத்தகங்களா இருக்குன்னு ஒரு சர்ச்சை வந்த உடனே, ஆட்சியில் இருக்கக்கூடிய நீங்க ஏன் அந்த புத்தகத்தை உடனடியா திரும்பப் பெறுவதற்கு இன்னும் உத்தரவு போடல? அந்த அலமாரியில் அலங்கரிக்க வேண்டிய அவசியம் என்ன?

இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டு வந்த பிறகு, அடுத்த வினாடியே அதிகாரத்தில் இருக்கக்கூடிய நீங்க அந்த புத்தகத்தை திரும்பப் பெறக்கூடிய உத்தரவு ஏன் போடல? இந்த புத்தகங்கள் எல்லாம் யார் கொள்முதல் பண்ணாங்க? எப்போது கொள்முதல் பண்ணாங்கன்ற விவரத்தை ஏன் இன்னும் வெளியிடல?

ஆட்சியா! கட்சியா!

நீங்க ரொம்ப கன்வீனியன்ட்டா சில தகவல்லாம் வந்து தவெகனுடைய ஐ.டி. விங்ல வெளியிடறீங்க. இந்த அரசாங்கத்தை பார்த்து நான் கேட்கிறது எல்லாம்? ஆட்சி நடத்துறீங்களா இல்ல காட்சி நடத்துறீங்களா? ஒரு அரசாங்கம் நடத்துதுன்னா, ஒரு குற்றச்சாட்டு வருதுன்னா அரசு தரப்புல பதில் சொல்லணும். அரசு தரப்புல ஏதாவது செய்திக்குறிப்பு இதுவரைக்கும் வெளியாயிருக்கா? இவங்க வெளியிடக்கூடிய இந்த கடிதங்கள் எல்லாம், இந்த கம்யூனிகேஷன்லாம் எப்படி வந்து தவெக கட்சியினுடைய ஐ.டி. விங்குக்கு போகும்?

இந்தக் கடிதங்களே வந்து அரசின் கடிதங்கள் இல்லைன்றது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குற்றச்சாட்டு. இதெல்லாம் ஃபேக்கா நரேட்டிவா செட் பண்ணி நீங்க வந்து கடிதங்களை சமூக வலைதளங்களில் பரப்புறீங்க.

முதல்ல இந்த புத்தகங்களை கொள்முதல் செய்வதற்கு கடந்த காலங்களில் இருந்த தவறுகள் எல்லாம் கலைவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில 2024-ல வெளிப்படைத்தன்மையோடு புத்தகங்களை கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு கொள்கையை வெளியிட்டது தி.மு.க. ஆட்சி. அந்த கொள்கையை ராஜ்மோகன் இப்போ வெளியிடணும்.

தி.மு.க. ஆட்சியில புத்தகங்களை லைப்ரரிக்கு வாங்குவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டது. உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது, பர்சேஸ் கமிட்டி போடப்பட்டது, புத்தகங்களை தேர்வு செய்கிற குழு போடப்பட்டிருக்குது, அதுக்கு விலை நிர்ணயம் பண்றதுக்கு குழு போடப்பட்டிருக்கு. அந்த குழு ஆணைகள் எல்லாம் வெளியிடப்பட்ட, இந்த வெக்கங்கெட்ட த.வெ.க. அரசு, இத வந்து பர்சேஸ் பண்ண டேட் என்ன? யார் பர்சேஸ் ஆர்டர் கொடுத்திருக்கிறா? எந்த டேட்ல வந்து உங்களுக்கு அக்கவுண்ட்ல அரசாங்கத்தினுடைய அக்கவுண்ட்ல இருந்து பணம் போயிருக்கு? இதையெல்லாம் ஏன் வெளியிடல?

இன்னும் இந்த கடிதங்கள் எல்லாம் இப்படி அனுப்பப்படாது? ஆன்லைன் டிரான்சாக்ஷன், 2024 கொள்கை முடிவு எடுக்கப்பட்ட பிறகு, ஒரு புதிய கொள்கை வகுத்த பிறகு இப்படிலாம் அனுப்ப மாட்டாங்க.

நான் இந்த பெரியார் அறிவுலக அலமாரியில் இருக்கக்கூடிய புத்தகங்களை வழங்கி இருக்கக்கூடிய பல நிறுவனங்களோட பேசுனேன். “எங்களுக்கு மெயில்லதான் சார் வந்தது, நாங்க ஆர்டரை பிளேஸ் பண்ணோம் சார், எங்களுக்கு பணம் அக்கவுண்ட்லதான் சார் வந்தது” அப்படின்னு சொல்றாங்க.

பொதுவெளியில் வெளியிடுங்கள்!

இப்போ நான் கேட்கிறேன், ஸ்டாண்ட்–அப் காமெடியன் மினிஸ்டர் ராஜ்மோகனை நான் கேட்கிறேன்: தைரியம் இருந்தா, வெக்கம் இல்ல… வெக்கம் இல்லைன்னா, கூச்சம் இல்லைன்னா, உங்க மடியில கனம் இல்லைன்னா, வெளிப்படையா என்ன டேட்ல இந்த ‘அகல் விளக்கு’க்கு நீங்கள் பண பரிவர்த்தனை செஞ்சிருக்கீங்கன்ற ஆன்லைன் டிரான்சாக்ஷனை பொதுவெளியில போடுங்க சார்!

இதுல ‘குடைவாசல்’ன்னு எழுதியிருக்காங்க சார், நல்லா ஜூம் பண்ணி காட்டுங்க. எந்த அரசு அலுவலகக் கோப்புல இந்த வார்த்தை ‘கொடைவாசல்’ னு வராது சார், ‘குடைவாசல்’ கு–ன்னா வரும். அரசாங்கத்தினுடைய கோப்புகளில் திருவாரூர் மாவட்டத்தில் இருக்கிற ‘குடைவாசல்’ கு–வன்னா வரும், இந்த கொ–வன்னா வராது.

கூறுகெட்ட ஆட்சி! வாயில வந்துரும், முதலமைச்சருக்குத்தான் வரும்லாம் கிடையாது, எங்களுக்கும் வரும்; ஆனா பண்பட்ட அரசியல்வாதி நாங்கல்லாம் அமைதியா இருக்கிறோம். இந்த கொ வராது, கூறுகெட்ட கவர்மெண்ட், விஜய் கூறுகெட்ட கவர்மெண்ட்!

உங்களுக்கு ஆட்சி செய்யவும் தெரியல, தமிழ்ல சரியான லெட்டரை வெளியிடவும் தெரியல. ஒன்னு ஃபேக் நரேட்டிவ் செய்ய தெரியுதே, அதை ஒழுங்காவது வெளியிடறியா? அதுவும் கிடையாது. இப்படி வராது! ஒரு அரசாங்கத்தினுடைய லெட்டர் போகும் போது ‘குடைவாசல்’ போட்டு திருவாரூர் மாவட்டம் போட மாட்டாங்க. டோர் நம்பர் போடுவாங்க, எந்த ஊரும்ன்னு போடுவாங்க, கிராமம் போடுவாங்க, தெரு போடுவாங்க.


இன்னொரு லெட்டர்ல பார்த்தீங்கன்னா, ‘கொடைவாசல் எல்.எஃப் சாலை’ன்னு போட்டிருக்கு, அதுல திருவாரூர் மாவட்டம் இல்லை. எல்.எஃப் சாலைன்னா என்ன? சென்னையிலதான் சார் இந்த மாதிரி பேர் எல்லாம் வைப்பாங்க. கிராமங்கள்ல இப்படிலாம் எல்.எஃப் சாலை எல்லாம் பேரு சுருக்கத்துல ஆங்கிலத்துல எல்லாம் செய்ய மாட்டாங்க சார். இது ஒரு ஃபேக் சார்!

நான் கேட்கிறேன், ஆட்சி நடத்துறது நீங்க? ஏன் DVAC ஆபீஸ்ல போய் கம்ப்ளைன்ட் கொடுக்குறீங்க? உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ஒரு கமிட்டி போடுறதுக்கு, இன்வெஸ்டிகேஷன் ஆரம்பிக்கிறதுக்கோ, இதுல இருக்கக்கூடிய தவறை சரி பண்றதுக்கோ அல்லது தவறு செய்தவங்களை தண்டிப்பதற்கோ? இந்த அரசுக்கு நோக்கம் இல்லை; திமுக, திமுக, திமுக மேல பழி போடணும். இப்படித்தான் வந்து வெத்து அரசியல் செய்யணும்.

அரசு விழாவில் குற்றச்சாட்டு!

இதை எங்க பேசுறாரு? ஸ்டாண்ட்–அப் காமெடியன் மிஸ்டர் ராஜ்மோகன் ஒரு அரசு விழாவில் பேசுறார். அரசு விழாவில், மகளிர் சுயஉதவி குழு விழாவில் வந்து தி.மு.க. மேல குற்றம் சுமத்தி இவங்க பேசுறாங்க.

இதுல வந்திருக்கக்கூடிய புத்தகங்கள் எல்லாம் பாருங்க சார். அதாவது எழுத்தாளர்கள், அந்த குறிப்பிட்ட அந்த நிறுவனத்திற்கு வந்து



148 எழுத்தாளர்கள் இருக்காங்க சார், தமிழ்நாட்டில் யாருக்குமே தெரியல சார். நான் அதுக்குள்ள எல்லாம் போகல; திரிஷா விஜய் – ஒரு புத்தகத்தினுடைய ஆசிரியர் பேரு ‘திரிஷா விஜய்’! உலக தமிழ்நாட்டில ஃபர்ஸ்ட் டைம் இப்பதான் இன்வென்ட் பண்ணிருக்காங்க. எந்த ஒரு பைத்தியக்காரனும் வந்து ‘திரிஷா விஜய்’ன்னு ஒரு புக்க வாங்க மாட்டான்; அதுவும் திமுக, நாங்க வாங்க மாட்டோம். இது ஒன்னு போதாதா தி.மு.க. செய்யவில்லை என்பதற்கு.

இது எல்லாமே வந்து, ஜூன் மாசம் சீல் அடிக்கப்பட்ட புத்தகங்கள் தான் என்ற காண்ட்ரவர்சி வந்திருக்குதே தவிர, ஜூன் மாசத்துக்கு முன்னாடி மார்ச் மாசம், பிப்ரவரி மாசம் வாங்கப்பட்ட புத்தகங்கள் காண்ட்ரவர்சி…

எழுத்தாளர் பெருமாள் முருகன் வெளியிட்டிருக்கக்கூடிய அந்த ஐயப்பாடு கூட, இந்த புத்தகங்களை பத்தி சொல்றது கூட ஜூன் மாசத்தில் இருக்கக்கூடிய இந்த சீல்தான். ‘திரிஷா விஜய்’ இந்த புத்தகத்தை வந்து பப்ளிஷ் பண்றது யார் தெரியுமா? சிக்மா பிரிண்டர்ஸ்,. விஜய்யுடைய மகன் ஒரு படம் எடுத்தார் சிக்மான்னு சொல்லிட்டு. இந்த பிரிண்டர்ஸ் நேம் பேரு சிக்மா, ஆத்தர் நேம் வந்து திரிஷா விஜய். இவங்க கட்சியில இருக்கிற ரசிகர்தான் விஜய் பேரை வச்சுக்கறாங்க, எம்.எல்.ஏ. விஜய் பேரை கூட சேர்த்துக்கறாங்க.

ஆனா இங்க வந்து விஜய் பாலாஜி, விஜய் செல்வம், விஜய் ஆதித்தன், சுமுகா விஜய் இப்படிப்பட்ட ஆத்தர்ஸை வச்சு புத்தகம் வாங்குறதுன்னா தி.மு.க. என்ன பைத்தியமா?

அறிவார்ந்த இயக்கம் தி.மு.க.!

ஏங்க, அறிவார்ந்த இயக்கம்ங்க, திராவிட முன்னேற்றக் கழகம் அறிவை முன்னிறுத்தி நாங்க அரசியல் பண்றோம், ஆட்சி செய்றோமே தவிர இவங்களை மாதிரி அரவேக்காட்டுத்தனமா வந்து ஃபேக் ரீல்ஸ் போட்டு அரசியல் பண்றவன் கிடையாது.

இப்போ நான் வந்து வெளிப்படையா கேட்கிறது, இந்த அரசாங்கத்தை பார்த்து: இந்த புத்தகங்கள் எல்லாம் இந்த ‘அகல் விளக்கு’ என்ற பப்ளிகேஷன் அந்த நிறுவனத்திற்கு எப்போது கொள்முதல் ஆர்டர் கொடுக்கப்பட்டது? எப்போ பேங்க்ல இருந்து அக்கவுண்ட்டுக்கு பணம் போயிருக்குது? எந்த தேதியில் இந்த புத்தகங்கள் பெரியார் அறிவு உலகத்திற்கு வரப்பெற்றது? இதையெல்லாம் வெளிப்படையா நீங்க அறிவிங்க!

நான் இன்னும் கூட ஒரு படி போய் சொல்றேன்: திமுக ஆட்சியில கலைஞர் நூற்றாண்டு நூலகத்துக்கு வந்து புத்தகம் வாங்கி இருக்கோம், இந்த காண்ட்ரவர்சி வரல. இது வரைக்கும் யாருமே சொல்லல. அண்ணா நூற்றாண்டு செஞ்சுநரி லைப்ரரி… சென்சுனரி லைப்ரரிக்கு இந்த காண்ட்ரவர்சி வரல. ஆட்சி மாற்றத்துக்கு பிறகு, குறிப்பா மார்ச் மாசத்தில் வாங்கப்பட்ட புத்தகங்களுக்கு எல்லாம் வராத ஒரு காண்ட்ரவர்சி, ஜூன் 22 ஆம் தேதி… இந்த ‘திரிஷா விஜய்’ புத்தகம் வந்து ஜூன் 22 ஆம் தேதி அன்னைக்கு விஜயோட பிறந்தநாள் அன்னைக்கு சீல் போடப்பட்டிருக்கு.

எங்களுக்கு இருக்கிற ஐயம் எல்லாம் என்னன்னா, இந்த தவெகக்காரங்களே இந்த செட்டு வேலைகள செஞ்சுட்டு, இது தி.மு.க. மேல பழி போடுறதுக்காக ஒரு ஃபேக் நரேட்டிவ் செட் பண்ணி இருக்காங்கன்ற ஒரு டவுட் எங்களுக்கு ஏற்படுது. எங்களுக்கு ஒன்னும் பயம் இல்லை, நான் ஸ்டாண்ட்–அப் காமெடியன் ராஜ்மோகன்கிட்ட கேட்கிறது எல்லாம் வந்து, டி.வி.எஸ்.சி. வாசல்ல போய் நீங்க கம்ப்ளைன்ட் கொடுக்கிறதுல பிரயோஜனமே கிடையாது. நீங்க ஒரு மந்திரி, உங்க துறையில விசாரணை வை, கமிட்டிய ஃபார்ம் பண்ணு, இம்மீடியட்டா இந்த ஆர்டரை கேன்சல் பண்ணு, இந்த புத்தகங்களை வித் டிரா பண்ணு, கொடுத்த பணத்தை ஃபோர்பிட் பண்ணு… வித் டிரா பண்ணு! இதெல்லாம் செய்றதுக்கு யோக்கியதை இல்லையா?

த.வெ.க. வெப்–சைட்டில் எப்படி வெளியாகிறது!

ஊழல், ஊழல், ஊழல்னு ஒப்பாரி வைக்கிறீங்களே, நீங்க ஒப்பாரி அப்புறம் வைங்க. திமுக தவறு செஞ்சிருந்தா, திமுக செஞ்சிருக்குன்னு எடுத்து போட்டு காட்டுங்க! அதைவிட்டுட்டு நீங்க வந்து ஒப்பாரி வைக்கிறதுக்கும் வெத்து அரசியல் செய்வதற்கும் நேத்திலிருந்து இன்னைக்கு வரைக்கும் தி.மு.க, தி.மு.கன்னு சொல்றீங்களே, இதுல உண்மையான குற்றவாளி யாரு? இது எப்படி வெளி யில வந்திருக்கு? எப்படி இந்த புத்தகம் வாங்குனது? இதுவரைக்கும் இந்த அரசாங்கம் வாய் திறந்திருக்கா? டி.வி.கேயினுடைய அபிஷியல் வெப்சைட், அபிஷியல் ட்விட்டர் ஹேண்டில்தான் இந்த கடிதங்களை வெளியிடுறாங்களே, அரசு தரப்புன்னு ஒன்னு இல்லையா?

வேர் இஸ் ஸ்கூல் எஜுகேஷன் செக்ரட்டரி? இந்த லைப்ரரி டைரக்டர் எங்க போயிட்டாங்க? இன்னைக்கு லைப்ரரியன் டைரக்டரா இருக்கிற ஐ.ஏ.எஸ். தான் அன்னைக்கு தி.மு.க. ஆட்சியில இந்த புத்தகங்கள் எல்லாம் கொள்முதல் செய்ததற்கான குழுவினுடைய தலைவர். இன்னைக்கு வந்து ஸ்கூல் எஜுகேஷன் செக்ரட்டரியா இல்லாம இருக்கலாம், ஒருத்தர் கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒருத்தர்… இருந்தார், ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் இன்னைக்கு வேற துறைக்கு மாறி இருக்கிறார், அவர்தான் அந்த உயர்மட்ட குழுவினுடைய தலைவர். ஏன் இவங்க அறிக்கை வெளியிடல? அரசு தரப்பு ஏன் வந்து பதில் சொல்லல?

இப்ப இந்த குழுல உட்கார்ந்து இருக்கிறவங்க எல்லாம் எந்தெந்த புக்கை இவங்க அப்ரூவ் பண்ணாங்கன்றதை வெளியிடணும். அரசாங்கம்… தி.மு.க. ஆட்சியில நாங்க வந்து புத்தகங்களை எதை வாங்கலாம் என்று ஒரு கமிட்டி போட்டோம், அந்த புத்தகங்களை எந்தெந்த புத்தகம் வாங்கலாம்னு இந்த கமிட்டி ரெக்கமெண்ட் பண்றதை வெளியிடுங்க. இப்போ எந்தெந்த புக்ல எவ்வளவு விலைக்கு வாங்கலாம்ன்றதை நாங்க போட்ட கமிட்டி ரெக்கமெண்ட் பண்ணுச்சுல, அந்த கமிட்டியினுடைய ஆர்டரை வெளியிடுங்க.

இப்போ இதெல்லாம் அரசாங்கத்துகிட்ட இருக்கு, இந்த டாக்குமெண்ட்லாம்… பைத்தியக்காரத்தனமா அரசாங்கம் நடக்குது! அரசாங்கத்துகிட்ட இருக்கிற டாக்குமெண்ட்ட மறைச்சிட்டு, ஃபேக்கா வந்து தவெகனுடைய ட்விட்டர் ஹேண்டில்ல, சமூக வலைதளங்களில் கூலிக்கு மாரடிக்கிறவங்ககிட்ட எல்லாம் பணத்தை கொடுத்துட்டு, இன்ஸ்டாகிராம் இன்ஃப்ளுயன்சர்ஸ்க்கு எல்லாம் பணத்தை கொடுத்துட்டு டெய்லி ரீல்ஸ் போடுறதை மட்டுமே வேலையா வச்சிட்டு இருக்கிற மிஸ்டர் சீப் மினிஸ்டர், கோப்பை திறந்து பாருங்க சார்! ஃபைலை திறந்து பாருங்க சார்! ஃபைல்ல இருக்கிறதை வெளியே கொண்டு வாங்க சார்!

திரிஷா விஜய் பெயரில் கேடுகெட்ட புத்தகம்!

‘திரிஷா விஜய்’ன்னு ஒரு கேடு கெட்ட ஒரு புத்தகத்தை யாராவது வெளியிடுவாங்களா? நான் ரொம்ப வார்த்தை அதிகமா சொல்றேன், இப்படி ஒரு புத்தகத்தை வெளியிடுவாங்களா யாராவது? திமுக வாங்குமா இதை? கொஞ்சமாவது புத்தி இருக்கத் தேவையில்லையா உங்களுக்கு? இப்ப இதெல்லாம் செஞ்சவன் தவெகாவினுடைய ரசிகன் எவனோ செஞ்சிருக்கான். இதை… அதை மறைக்கிறதுக்காக திமுக மேல இவங்க வந்து பழி போடுறாங்க. இதுல ப்ரோக்யூர் பண்ண காலம், யார் வாங்குனாங்க, எப்ப வாங்குனாங்க, என்னென்ன புக்குங்கெ ல்லாம் ரெக்கமெண்டேஷன் கொடுத்திருக்காங்க, புக்கோடவிலை என்ன – இதையெல்லாம் எடுத்து போடுறதுக்கு துப்பு இல்ல!

துப்பு கெட்ட அரசாங்கம்! மானம் கெட்ட அரசாங்கம்! வெக்கம் கெட்ட அரசாங்கம்! கொஞ்சம் கூட ஒரு அறிவே இல்லாத ஒரு அரசாங்கம் இன்னைக்கு வந்து அரசியல் செய்றதே வேலையா வச்சிருக்கு. ஆட்சி செய்றதுக்கு வக்கு இல்ல! வெக்கமா இல்லையா உங்களுக்குலாம்? ஆறு மாசம் ஆட்சிக்கு வந்து இன்ன வரைக்கும் உங்களால உருப்படியா ஒண்ணுமே சொல்ல முடியல. பெரியார் மேல திடீர்னு பாசம் பொத்துக்கிச்சு உங்களுக்கு! நீட்டுக்கு எதிரா இருக்கக்கூடிய போராட்டத்தை வந்து பெரியார் திராவிட கழகம் முன்னெடுக்கும் போது, அவங்களுக்கு அனுமதி கொடுக்காம, அவங்களை எல்லாம் வந்து அடைச்சு வச்ச தவெக ஆட்சி! பெரியார் திடலுக்கு போலீசை குவிச்ச தவெக ஆட்சி! இன்னைக்கு பெரியார் மேல அக்கறை வந்துருச்சு.

தமிழ்நாட்டின் தரம் கெட்டுப் போயிருக்கிறது. ஆட்சியின் தரம் கெட்டுப்போயிருக்கிறது. பல தவறுகள் நடக்கின்றன. இதையெல்லாம் மூடி மறைப்பதற்காக, அதுவும் வந்து ஸ்டாண்ட் அப் காமெடியன் மிஸ்டர் ராஜ்மோகன் வந்து அவர் மீது ஒரு 5 கோடி ரூபாய் குற்றச்சாட்டுக்கு திமுகவில் நானே டிவிஏசியில் கம்ப்ளைன்ட் கொடுத்தேன். அதற்காக ஒரு கவுண்டர்.

டிவிஏசிக்கு, சார், நான் என்ன கேட்கிறேன்? இந்த அரசாங்கத்தைப் பார்த்து, I feel very bad. தினமும் உங்களை ஒரு பிரஸ் கூப்பிட்டு வண்டவண்டியாகத் திட்டுவதற்கு எங்களுக்கு அசிங்கமாக இருக்கிறது. மக்களுக்கு தயவுசெய்து வேலை செய்யுங்கள்.

பிழைப்பு நடத்த முடியாதவன் செய்யும் வேலைதான், நேற்றிலிருந்து இன்றுவரைக்கும் இந்த ஊடகங்களுக்கு எவ்வளவு வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதையாவது உருப்படியான வேலை ஏதாவது அரசாங்கத் தரப்பிலிருந்து செய்தார்களா? ஏதாவது பதில் வந்ததா?

நான் கேட்கிறேன், என் நண்பர்களைப் பார்த்து. யாராவது போய் அமைச்சரிடம் இதற்கு என்ன விளக்கம் என்று கேட்க முடிந்ததா? அவர்கள் பேசுவதுதான் பேச்சு. அவர்கள் செட் செய்வதுதான் நரேட்டிவ் சார்.

நீங்கள் மினிஸ்டராக இருக்கிறீர்களே, அரசின் சார்பாக, துறையின் சார்பாக அரசு செய்திக்குறிப்பு எங்கே சார்? யாராவது கேட்க முடியுமா?

அதனால்தான் நான் என்ன கேட்கிறேன் என்றால், திமுக வெளிப்படைத்தன்மையோடு புத்தகங்களை வாங்குவதற்கு ஒரு கொள்கை முடிவை வெளியிட்டு 2024-ல் அரசாணை போட்டோம். அந்த அரசாணையை வெளியிடுங்கள். மக்கள் பார்க்கட்டும்.

எப்படி வாங்க வேண்டும், எந்த வகையில் வாங்க வேண்டும் என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறோம். அது மக்களுக்குத் தெரியட்டும். Educate people.

திமுக குழு போட்டது புத்தகங்களைப் பர்ச்சேஸ் செய்வதற்கு. எந்தப் புத்தகத்தை வாங்க வேண்டும், என்ன விலையில் வாங்க வேண்டும், என்ன மாதிரியான புத்தகங்களை வாங்க வேண்டும் என்பதற்குப் பல்வேறு கமிட்டிகள் இருக்கின்றன.

அந்தக் கமிட்டிகள் எல்லாம் வெவ்வேறு தேதிகளில் எந்தெந்தப் புத்தகங்களை வாங்குவதற்குப் பரிந்துரை செய்தன என்பதைப் பொதுவெளியில் போடுங்கள்.

வங்கிக் கணக்கு விவரங்கள் எங்கே?

ஜூன் மாதம் வாங்கப்பட்ட இந்தப் புத்தகங்களுக்கு எப்போது பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டது? வங்கிக் கணக்கு விவரங்களை எடுத்து பொதுவெளியில் போடுங்கள்.

இந்தப் பப்ளிகேஷனுக்கு யார் ஆர்டர் போட்டார்கள் என்பதைப் பொதுவெளியில் போடுங்கள்.

ஏன் அரசு தரப்பில் செய்திக்குறிப்பு இன்னும் வரவில்லை? வெறும் தவெகவினுடைய ஐடி விங்கில் மட்டுமே வந்துகொண்டிருக்கிறது.

அதனால் இவர்களுக்கு ஆட்சி செய்யவும் தெரியவில்லை. திமுக மீது ஒழுங்கான நரேட்டிவ் செட் பண்ணவும் தெரியவில்லை.

அதனால் நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்து மிகவும் பரிதாபப்படுகிறேன். ஃபெயிலியர் ஆகிக்கொண்டே இருக்கிறீர்கள் சார்.

விஜய் சார், ஒவ்வொரு சப்ஜெக்ட்டிலும் நீங்களும் பார்க்கிறீர்கள். திமுக மீது ஏதாவது ஒன்றைச் சொல்லலாமா, சொல்லலாமா என்று ஒன்றும் இல்லாமல் தினமும் பிழைப்பு ஓட்டுகிறீர்கள்.

எப்படிடா இந்த ஐந்து வருட ஆட்சியில் ஒவ்வொரு நாளையும் எதையாவது ஒன்றை யோசித்து நம்ம இந்தப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு விஷயத்தையும் யோசித்து யோசித்துத்தான் நீங்கள் நரேட்டிவ் செட் செய்கிறீர்களே தவிர, இன்று நான் இதைச் சாதித்தேன், இன்று நான் இதைச் செய்தேன் என்று சொல்வதற்கு வக்கில்லை, துப்பில்லை.

ஒரு பெரிய தப்பு செய்திருக்கிறீர்கள். திமுக ஆட்சியில் போடப்பட்ட ஒரு ஜிஓவை நீங்கள் திரும்பப் பெற்றிருக்கிறீர்கள்.

நீங்கள் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். தவெககாரனுடைய மந்திரிகளைப் போய்க் கேள்வி கேட்க வேண்டும். இந்தப் புத்தகங்கள் எப்போது வாங்கினார்கள்? யார் வாங்கினார்கள்?

இத்தனை கேள்விகளைத் திமுக கேட்டிருக்கிறது. நான் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் பதில் வர வேண்டும்.

Government, where is the School Education Secretary? Library Director இன்னும் இருக்கிறாரா? இதைக் கொள்முதல் செய்த Director still holding as Director of Libraries?

மார்ச் மாதம் 15ஆம் தேதி எலெக்ஷன் நோட்டிபிகேஷன் வெளியிடுகிறார்கள். நமக்குத் தமிழ்நாட்டில் தேர்தல் வருகிறது.

இந்த டிரான்ஸிஷன் பீரியடில் யார் தப்பு செய்தார்கள்? Who is culprit? அதைத்தான் சொல்கிறேன். ஆபீசர்களைப் பிடியுங்கள். எங்கள் கமிட்டி மெம்பர்ஸ் யாருக்குமே தெரியவில்லை சார். இப்படிப்பட்ட ஒரு புத்தகம் வந்தது எங்களுக்கே புதிதாக இருக்கிறது சார். அந்தக் கமிட்டியில் இருந்த மெம்பர்ஸுக்கே புதிதாக இருக்கிறது சார்.

ஏன் சார், இந்த விஷயத்தை கட்டுரையாக யார் மூலமாக வெளியே வந்ததோ, பெருமாள் முருகனுக்கே வெளியே தெரியவில்லையே? அவரே ஒரு கமிட்டி மெம்பர்.

அவர் வெளிக்கொண்டு வந்தாரே! அவருக்கே தெரியவில்லையே! அதுதான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது.

அப்போது நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், அந்தக் கமிட்டியில் இருந்த ஒருவருக்கே இது புதிதாக இருக்கும்போது, Government should come with transparent detailed enquiry.

அதை விட்டுவிட்டு, ஊருக்கு முன்னால் திருடன், திருடன், திருடன் என்று ஓடுகிற மாதிரி, எதற்கு இந்த ஸ்டாண்ட் அப் காமெடியன் போய் கம்ப்ளைன்ட் கொடுக்கிறார்?

வெட்கங்கெட்ட முதலமைச்சர். வேறு வேலை வெட்டி இல்லாமல் திமுகவைச் சொல்லித்தான் பிழைப்பு நடக்கிறது. அதனால்தான் அறிக்கை கொடுக்கிறார்.

இதற்கு முன்பாக நிறைய மக்கள் பிரச்னைகள் நடந்திருக்கின்றன. அதற்கெல்லாம் வந்து வெளிப்படையான ஒரு அறிக்கையெல்லாம் கொடுத்ததில்லை. இந்த விஷயத்திற்கு மட்டும் உடனே அறிக்கை…

அதான் ஃபேக் நரேட்டிவ் ஸ்ட்ராட்டஜி செட் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள்.

அந்த ஃபேக் நரேட்டிவை முதலில் யார் செய்ய வேண்டும் என்றால், அவரே செய்தால்தான் நன்றாக எடுக்கும். ஏனென்றால், அவர் இன்னும் முதலமைச்சராக மக்களால் கொண்டாடப்படவில்லை. சினிமா ஹீரோவாகத்தான் கொண்டாடப்படுகிறார்.

அதனால் இவர் சொன்னார் என்றால் அது வெளியே போகும்.

நான் கேட்கிறேன். எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றனவே! எதற்காவது முதலமைச்சர் விஜய் வாய் திறந்தாரா? இதற்கு மட்டும் ஏன் வாய் திறக்கிறார்? செட் பண்ணிக் கொடுத்த டயலாக்கை டெலிவரி செய்வதற்கு வந்திருக்கிறார். அவ்வளவுதான்.

இவ்வாறு அவர் பேட்டியளித்துள்ளார்.

தூத்துக்குடி அருகே கடலில் விழுந்து மாயமான மீனவர் பலி!

மீனவரை மீட்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை!

மீன்வளத்துறை அலுவலகத்தை உறவினர்கள் முற்றுகை!

தூத்துக்குடி, நவ. 10–

தூத்துக்குடி அருகே கடலில் விழுந்து மாயமான மீனவர் பலியானார்.

கரை ஒதுங்கிய உடலை மீட்டு உடற்கூராய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


கடலில் விழுந்த மீனவரை மீட்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என த.வெ.க. அரசு மீது குற்றச்சாட்டி மீன்வளத்துறை அலுவலகத்தை உயிரிழந்த மீனவரின் உறவினர்கள் முற்றுகையிட்டனர்.

தூத்துக்குடி அருகே, கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரின் உடல், கரை ஒதுங்கிய நிலையில், அவரது குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தூத்துக்குடி விசைப்படகு மீன்பிடி துறைமுகத்திலிருந்து, மீன்பிடி தொழிலுக்குச் சென்று கரை திரும்பிக் கொண்டிருநத விசைப்படகில் இருந்து, மட்டக்கடை பகுதியைச் சேர்ந்த தம்பி ராஜ், தவறி கடலில் விழுந்தார். படகிலிருந்த சக மீனவர்கள், இரண்டு விசைப்படகுகள் மூலம் கடலில் விழுந்து மாயமான தம்பி ராஜை தேடினர். மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தும், மாயமான மீனவரை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என புகார்கள் எழுந்தன. இந்நிலையில் மாயமான மீனவரின் உடல், தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில் கரை ஒதுங்கியது. இதையடுத்து, போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். இதனிடையே, மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட மீனவர் தம்பிராஜின் உறவினர்கள், மீனவரை மீட்க அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டினார். மீனவரின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்
நவம்பர் 10 (1988)



கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி அவர்களோடு இணைந்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.